இலங்கைத் திறந்த பல்கலைக்கழகம்
சட்டமாணிப் பட்டப் படிப்பு திட்டம் 2006
தொடர் மதிப்பீட்டு பரீட்சை 2 மட்டம் 5
LWU 3311 – நிர்வாகச் சட்டம்
காலம்: 40 நிமிடங்கள்

திகதி: 09.11.2006 நேரம்: மு.ப 10.15 - மு.ப 10.55

ஒரு வினாவுக்கு மட்டும் விடை தருக.

1. "குறிப்பாக குறித்துரைக்கப்பட்ட ஆட்களுடைய நன்மைக்காக அதிகாரத்தை பயன்படுத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் ஒரு பகிரங்க அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளவிடத்தும் இது தொடர்பாக சட்டவாக்கத்தின் மூலம் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகள் ஊடாக அவ் அதிகாரத்தை பிரயோகிக்க உரித்துடையவர்களாக இருக்கின்ற விடத்தும் அவ் அதிகாரம் கட்டாயமாக பிரயோகிக்கப்பட வேண்டும் என்பதுடன் நீதி மன்றம் அதனை பிரயோகிக்குமாறு வற்புறுத்தும்".

Judicial Review of Administrative Action S.A. de Smith 2nd edition page 270

தற்துணிவு அதிகாரம் மீதான நீதிமுறை கட்டுப்பாட்டுடன் தொடர்புறுத்தி இக் கூற்றை நுணித்து ஆராய்க.

2. புரொலாந்தின் உள்ளூராட்சி அதிகார சபையொன்று நியதிச்சட்டம் ஒன்றின் மூலம் உப வீதிகளையும், ஒழுங்கைகளையும் சுவீகரித்து அதனை விஸ்தரிப்பதற்கு அதிகாரம் பெற்று இருந்தது. அத்துடன் குறிப்பிட்ட பிரதேசத்தினுடைய பொது வசதிகளை பராமரிப்பதற்கும் அதிகாரம் வழங்கப்பட்டு இருந்தது. 2005ஆம் ஆண்டு உள்ளூர் அதிகாரசபை 7 வீடுகளுக்கு செல்லக்கூடிய ஒரு உப வீதியை சுவீகரித்தது. இவ் வீடுகளுடைய குடியிருப்பாளர்கள் உள்ளூர் அதிகார சபைக்கு வரி செலுத்தி வருகின்றனர்.

திரு.. பெரேராவும் அவ்வீடுகளில் வசிக்கும் ஏனைய குடியிருப்பாளர்களும் உள்ளூர் அதிகார சபையின் தவிசாளரிடம் அண்மையில் சுவீகரிக்கப்பட்ட உப வீதியை விஸ்தரிக்குமாறு எழுத்து மூலமாக வேண்டினர். எவ்வாறாயினும் இவ்விடயம் தொடர்பில் உள்ளூர் அதிகாரசபை எவ்வித நடவடிக்கையையும் மேற்கொள் வில்லை.

சட்ட பரிகாரங்களை பெற்றுக்கொள்ளும் பொருட்டு திரு. பெரேராவினால் திருப்திப்படுத்தப்பட வேண்டிய தேவைப்பாடுகளை கண்டறிந்து திரு பெரேராவுக்கு ஏதேனும் சட்டப் பரிகாரம் இருக்கின்றதா என்பது தொடர்பில் ஆராய்க.

(பதிப்புரிமை பெற்றது)